காந்தியார் நினைவுச் சின்னத்தின் பேரால்

பித்தலாட்டமா?

வருங்கால மக்களுக்கு விளங்காத நிலை வேண்டாம்

பொதுமக்கள் விடுதலைக்குப் போராடியவர் பெயரைப் புதிராக்கி விடாதீர்கள்

Phone No 4502 விலை ஒரு அணா

Regd. No. M. 5458 இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (2—4—50) வெளியூர் (3—4—50) [இதழ் 212

சேரி, சிற்றூர் அக்ரகாரத்தை ஒன்றாக்க முயலுங்கள்

—(0)—

காந்தி நினைவுத்தூண் பற்றிய ஆய்வுரை

விளையாட்டுகளுக்கு மட்டும் உபயோகப்படுத்தப்படுமென்றும் போட்டிப் பந்தயங்களுக்கு விடப்படாதென்றும் கூறப்படும் நகராண்மைக் கழக ஸ்டேடியம், காந்தி நினைவுத்தூண்நிதிக்குப் பணம் கொடுக்கப்பட்டால், போட்டிப்பந்தயம் நடத்தப்படவும் விடப்படுமென்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

சென்னை, ஏப். 1—

சென்னை நகராண்மைக் கழக 'ஸ்டேடியத்'தில் கூட்டங்கள் நடத்த அனுமதிப்பதிலும், பாரபட்சம் அதிகம் காட்டுவதாகத் தெரிகிறது.

பலமாதங்களுக்கு முன்னால் தமிழ்நாடு எல்லை மாநாடு [illegible]த அனுமதித்த அதே அதிகாரிகள், குறள் மாநாடு [illegible]

[illegible] அரசிய லில் செல்வாக்கு உள்ளவர்களும், முதலாளிகளாகவும் இருப்பதினால்தானோ என்னவோ?

விளையாட்டுகள் மட்டும்தான் நடத்த வேண்டுமென்றும், போட்டிப் பந்தயங்கள் நடத்த அனுமதி கோரிய பலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. காரணம் புல்தரை, மக்களால் மிதித்துப் பாழாக்கப்படுமென்று கருதப்பட்டதால்தான். இந்தக் கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் முறையென்று நாம் கருதியிருக்கலாம்.

ஆனால் மார்ச் முதல் வாரத்தில் ஒரு குத்துச்சண்டை நடத்த, அனுமதி கோரினார் ஒரு நண்பர். அதற்கு அனுமதிக்க முடியாமைக்கு காரணம் காட்டி நகராண்மைக் கழக அதிகாரி மறுத்துவிட்டார்.

அனுமதி கிடைக்காததால் அந்த நபர் நம்பிக்கை இழந்துவிடவில்லை. சிபாரிசு மூலம்தான் எதையும் சாதிக்க முடியுமென்பது அவருக்குத் தெரியும் போலும்! காந்திக்கல் தூண்நிதிக்கு ரூ. 3000 கொடுத்து விடுகிறேன், லாப நஷ்டத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை என்று உறுதிகூறி நகரப் பிரமுகர் ஒருவரின் சிபாரிசுடன் மீண்டும் மனு செய்துகொண்டார்.

உடனே மனு கவனிக்கப்பட்டு, விதிகளெல்லாம் மீறப்பட்டு, குத்துச்சண்டைப் போட்டி நடத்த அனுமதி வழங்கப்பட்டதென்று நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

ஒப்பற்றத் தியாகம் செய்த காந்தியார் உலகப் பெரியாராகி விட்டார். அவருடைய நினைவு வரலாற்றில் பொன்னெழுத்தால் பொரிக்கப்பட்டுள்ளது. தோழர் காந்தியாருக்கு நாம் எழுப் [illegible]

[illegible] மக்களிடையே பரப்பமுயற்சிப்பது ஆகியவற்றில் ஈடுபடுவதேயாகும்.

நீக்ரோக்கள் விடுதலைக்காகப் போராடினார் ஆபிரஹாம் லிங்கன். ஓர் அளவு வெற்றியும் பெற்றார். ஆனால் அவர் விடுதலைத் திட்டத்தை அமுல் செய்யும் நேரத்தில், வெள்ளை நிறவெறியனொருவனால் சுட்டு வீழ்த்தப்பட்டார். ஆபிரகாம் லிங்கன் நீக்ரோ விடுதலைக்காகப் போராடினான் என்று எல்லோரும் புகழ்ந்தார்கள். ஒப்பற்ற ஞாபகார்த்த சின்னம் எழுப்பினார்கள்; ஆனால் கண்ட பலன் என்ன? இன்னும் நீக்ரோக்கள் சித்ரவதை செய்யப்படுகின்றனர். லிங்கன் சிலை எழுப்பப்பட்டதின் கருத்து பல அமெரிக்க நீக்ரோக்களுக்கு இன்னும் விளங்கவேயில்லை. அதுபோலவே காந்தியார் நினைவுச் சின்னமும் பொருளற்றதாக ஆகிவிடக் கூடாதென்பதே நம் பேரவா.

சேரியென்றும், சிற்றூர் என்றும் அக்ரகாரமென்றும் இருக்கக் கூடாதென்று காந்தியார் கூறினார். அதற்கு இது வரை என்ன செய்யப்பட்டது? கேட்கிறோம் அரசியலாரை; தூண் எழுப்ப முனைந்துள்ள தோழர்களை. நினைவுத் தூண்கள் எழுப்பப் பணம் மட்டுந்தான் தேவை. அந்தப் பணத்தைக் கள்ளமார்க்கெட்டு முதலாளிகள் ஏராளமாகக் குவித்து வைத்திருக்கிறார்கள். காந்தியார் நினைவுச் சின்னத்துக்கு அதில் ஒருபகுதி தந்தால், அவர்களுடைய கள்ளச் செயல்களெல்லாம் மறைக்கப்படும்; மறைக்கப்பட்டுவிடும். ஆகை

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

மது வெறி ஒழிய புது மருந்து

அருந்தும் ஆசையை அறவே ஒழிக்கும்

பாரிஸ், ஏப். 1—

குடிப்பழக்கத்தை ஒழிப்பதற்கான ஒரு மருந்து பாரிஸில் டாக்டர் சமார்ட் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இம்மருந்தை இஞ்செக்ஷன் செய்தால் 10 பிண்ட் மதுகுடிக்கும் வழக்கமுள்ளவன் ஒரு பிண்ட்தான் குடிப்பானாம். இம்மருந்தையே இரண்டாவதாக இஞ்செக்ஷன் செய்தால் குடிக்கவேண்டும் என்கிற ஆசைகூட இல்லாது போய் விடுமாம்.

இம்மருந்து ஒருவருக்கு இஞ் [illegible] செக்ஷன் செய்த பிறகு பெரிய குடிகாரனாக இருந்த அவர் தன் அருகே மது வாசனைகூட அடிப்பதை அடியோடு வெறுத்து அதை [illegible] விட்டாராம்.

தோழர் ஆர். கே. ஷண்முகம் ராஜினாமா

புதுடில்லி, மார்ச். 31—

முன்னாள் நிதிமந்திரியாக இருந்த தோழர் ஆர். கே. ஷண்முகம் இந்தியப் பாராளு மன்றத்திலிருந்து விலகிக்கொண்டார்.

ஆஸ்திரேலியாவில் மக்கட்தொகை அதிகரிப்பு

லண்டன், ஏப்ரல். 1—

ஆஸ்திரேலியாவின் மக்கட்தொகை சென்ற செப்டம்பருடன் முடிந்த 9 மாதங்களில் 178,000 பேர் அதிகரித்திருக்கின்றனர். இதில் 77000 பேர் வெளிநாடுகளிலிருந்து குடியேறியிருக்கின்றனர்.

சோவியத் அதிகாரி மாஸ்கோ திரும்பினார்

டெஹ்ரான், ஏப். 1—

ஈரானின் சோவியத் அதிகாரியாக இருந்த காமிலராவ் மாஸ்கோவிற்குப் புறப்பட்டு இருக்கிறார். ஈரான் சர்க்கார் இவரைத் திருப்பி அழைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டதாக வதந்தி பரப்பப்படுகிறது.

சிறுகதை

அன்றொரு நாள்

[கோவல்கிழார்]

"நீங்கள் என்னை மறந்துவிடுவதானால், கயிற்றில் தொங்கி உயிர்விடுவதன்றி வேறு வழியில்லை." "நான் மட்டும் என்ன உயிர்வாழப் போகின்றேனா? நம் காதலுக்குத் தடையாயுள்ளவர், கைகொட்டி நகைக்க விட்டு விடுவேனா? நானும் நீ செல்லும் அங்குதான வருவேன். கவலைப்படாதே! கண்மணி! வெற்றிக்கு வழிதேடுவோம் வெற்றிக்குப்பதில் வேதனையென்றால் வேறு வழியில்லை நம்முயிர்விடுவதைத் தவிர!"

இந்த உரையாடல் மணிக்கும், அவன் காதலி பூங்கோதைக்கும் நடந்தது அன்றொரு நாள்! பூங்கோதை நற்குடியிற் பிறந்தவள். நல்லதோர் தலை சிறந்த அழகி! இளமை ஒளி வீசிற்று அவள் முகத்தில் பொதுவாகக் கூறவேண்டுமானால், இலக்கியத்தில் பெண்களுக்குக் கூறும் இலக்கணங்கள் யாவும் பொருந்தியிருந்தது. இலக்கியத்திற்கோர் எடுத்துக்காட்டு, மாதர்களில் தலை சிறந்த மாண்பினள், மாங்குயில்தான் இசையில், திருமணமாகாத மங்கை! அமமங்கை நல்லாளின் பிறப்பிடமான திருவையாறைச் சேர்ந்தவன் தான் மணியும். அகிசப்படிப்பில்லாதவன். ஆனாலும் அறிவாளி. கேள்வி ஞானம் அதிகம் அடக்கமுடையவன். சிறிது மண்டைகன முமுண்டு. ஓர் ஆணழகன். நற்பண்பினன், நல்லொழுக்கினன். கயவஞ்சகனல்ல! சீர்திருத்த வாலிபன். எப்படியோ இருவருக்கும் தொடர்புண்டாயிற்று! காதல் மலர் அரும்பிற்று. காதற் பூஞ்சோலையில் கான மயிலென நடம்புரிந்தனர்காதலர்கள். கட்டவிழ்த்து விட்டக் கன்று போல்சேர்ந்து விளையாடினர் இளங்காதலர்கள். சேற்றில் செந்தாமரைக் கொடியுடன் அல்லி மலர்க் கொடி சேர்ந்தால் எப்படி இருக்குமோ அப்படி அவர்கள் காதலுள்ளத்தால் பின்னப்பட்டிருந்தனர். எருமைத் தண்ணீரை விட்டு, எப்படிப் பிரியாதோ அப்படி இருந்தான் மணி பூங்கோதையுடன். பூங்கோதை என்ற காதல் தடாகத்தில், வீழ்ந்து கிடந்தான் மணி. நாட்கள், திங்கள் பல, ஆண்டு பல சென்றன. ஆயினும் அவர்கள் காதல் வளராததே தவிரத் தேயவில்லை. புதுமையுள்ளப் புதுமை மோகங்கொண்டு பூரித்தனர். வஞ்சக வுலகிற்கு இவர்கள் நெஞ்சம் தெரியாமலாபோகும்! ஒருவர், இருவர், பிறகு ஊரே அறிந்தது. அவரவர் பெற்றோர்களுக்கும் தெரிந்தது. பெரிய மனிதர்கள் பெற்றோர்களிடம் படையெடுத்தனர். வைதீகத்தைக் கட்டி பட்ட வஞ்சகக் கோட்டையில் வாழும் எகயற்றப் பெற்றோர்கள் அறிவார்களா, இளங் காதலர்கள் தூயவுள்ளத்தை, அவர்கடாது அடைய மாறா இன்ப வுள்ளத்தை! படை பலம் அதிகமாயிற்று குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டான் மணி! மணஞ் செய்விக்கலாமோ என்றால் "சாதி," என்ற சனியன் தடைசெய்தது. சமூகமே பாழ்குழியில் தள்ளினர் சந்தர்ப்பவாதிகள். சமக்கர் முறையாவும் சலிப்பின்றி நடம்புரிந்தது. சரிந்து விழும் சாதிச சயக் கோட்டையில் வெற்றிக்கொடி பறந்தது வேதனையுள்ளத்தோடு பிரிக்கப்பட்டான் இளங்காதலன் மணி! காதலியுங்கைவிட்டாள்! இல்லை! இல்லை! நெஞ்சிலுமின்றி நேர்மையையுங் கைவிட்டு, நெகிழவிட்டான் மங்கை நல்லாளை. நழுவினால் போதுமென்ற நிலையையெய்தினன் மணி. காதற்கோட்டை சுக்கு நூருக்கப்பட்டது. காதலர் பிரிந்தனர், கலங்கிய கண்களோடு. இல்லை, காதலி பிரிந்தாள் கசக்கிய கண்களோடு. ஆறுதல் கூறப்பட்டது அவளது பெற்றோர்களால்! அவனைப் பற்றி அவளிடம் இழிவாகப் பேசப்பட்டது. வேதனையை வெளிபடுத்தினள், பயமில்லை, ஒருவாறு தேறுதல் அடைந்தாள். அடுத்தத்திங்கள் ஆடம்பரத் திருமணம். யாருக்கு? பூங்கோதைக்கும் இரண்டாம் தார இரணியனுக்கும், அவளது உறுதி, அன்பு, இன்பக்காதல் எங்கே? யாவும் மறைந்தது! பரக்கட்டைக்கு சமமானாள். மறுத்துப்போயிற்று அவன் உள்ளமும். கயிற்றில் தொங்கி உயிர்விடுவதாகக் கூறினளே! [illegible] லுள்ளத்தில [illegible] ஆனால், மன[illegible] ருன் படை[illegible] கூட்டத்தில[illegible] ணம் கருகிய உள்ளத்தோடு உண்மையான காதலானால், உயிரையே காணிக்கையாகச் செலுத்தியிருக்கவேண்டாமா? செய்தானா கோழை! காதலுமில்லை, ஒன்றுமில்லை! எல்லம் காரியத்தைச் சாதிக்கும் சாதனந்தானே!

போலி மருத்துவர்

மதுரை, மார்ச் 30—

டாக்டர் தொழில் நடத்துவதற்குண்டான சர்டிபிகேட்டோ, டிகிரியோ, டிப்ளமாவோ எதுவும்பெற்றுக்கொள்ளாமல், இவைகளில் தேர்ச்சி பெற்றவர்போல் நடித்ததாகவும், வைத்தியம் செய்து வந்ததாகவும், இந்நகர் வடக்குவெளி வீதியைச் சேர்ந்த எஸ். கிருஷ்ணபிள்ளை என்பவர்மீது நகர் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஓர் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாஜிஸ்திரேட் அருள்தான் குற்றப் பத்திரிகையை ஏற்றுக்கொண்டு, அடுத்த மாதம் 11-ம் தேதிக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

அட்லாண்டிக் நாடுகளின் படைத் தலைமை

லண்டன், ஏப். 1—

அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளின் படைத் தலைமையை கனடா கவர்னர்-ஜெனரலான அலெக்ஸாண்டர் ஏற்பார் என்று கனடாவில் வதந்தி உருவதாக ஒரு பிரிட்டிஷ் பத்திரிகையில் டோரண்டோ நிருபர் கூறுகிறார்.

தென்னாட்டு சைக்கிள் வீரர் மணி

[தோழர் பி. எஸ். மணி சென்னையைச் சேர்ந்த ஒரு தமிழ் இளைஞர். உடற்பயிற்சி, பந்தாட்டம் ஆகியவற்றில் அளவற்றப் பற்றுகொண்டவர் சைக்கிள் பந்தயங்களில் படிப்படியாக வெற்றி கண்டு வருகிறார். இவர் அண்மையில் நடைபெறவிருக்கும் உலக சைக்கிள் பந்தயத்தில் பங்கு கொள்ள பெல்ஜியம் செல்லப்போகிறார். இதுகாறும் நிலைநாட்டப்பட்டுள்ள சைக்கிள் பந்தய உலக 'ரிகார்ட்' 12 செகண்ட் தோழர் மணி 14 செகண்டுகள் வரை சென்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.]

பி. எஸ் மணி

இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் உலக சைக்கிள் வல்லுநர்களின் போட்டிப் பந்தயம் புருசேல்சில் நடைபெறும். அப்போட்டியில் இந்தியாவும் பங்கு கொள்ளும். தேசிய சைக்கிள் வல்லுநர் கழகம் இதற்காக முன்னதாகவே 20 சைக்கிள் வல்லுநர்களைத் தேர்ந்தெடுத்து வைத்துள்ளது.

அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் சென்னையைச் சேர்ந்த தோழர் பி. எஸ் மணியும் ஒருவராவார். அண்மையில் பம்பாயில் நடைபெற்ற 'ஒலிம்பிக்' சைக்கிள் பந்தயத்தில் 1000 மீட்டர் தூரம் செல்லும் சைக்கிள் பந்தயத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றார். எனினும் அவரது திறமையை அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர். 180 கில்லோ மீட்டர் சாலை [illegible] காண முடியாமல் போய்விட்டது.

1946-ம் ஆண்டு வரையில் தான் ஒரு பிரபல சைக்கிள் வல்லுநராக வரவேண்டும் என்ற எண்ணமே தோழர் மணிக்கு ஏற்படவில்லை. 1946-ல் சென்னை நகரசபை ஸ்டேடியம் திறக்கப்பட்ட போதுதான் அவருக்கு இத்தகைய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது ஸ்டேடியத்தில் பந்தயக்காட்சி நடைபெற்றது. அதில் சைக்கிள் பந்தயமும் ஒன்று பொழுதுபோக்குக்காகவும், உல்லாசத்துக்காகவும் சைக்கிள் ஓட்டிப் பழகிய தோழர் மணி தனது நண்பர்களால் தூண்டப்பட்டு, இந்தப் பந்தயத்தில் பங்கு கொண்டார் ஆனால், ஆரம்பத்தில் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை என்றாலும், அவர் தனது முயற்சியைக் கைவிடவில்லை. 'பார்க் வேடிக்கை' சார்பில் நடைபெற்ற மற்றொரு பந்தயத்தில் இவர் முதற் பரிசு பெற்றார்.

பின்னர் 1948-ல் ஜனவரியில், தென்னிந்திய ரயில்வேயைச் சேர்ந்த தோழர் ஹரிச்சரால் நடத்தப்பட்ட 10 மைல் சைக்கிள் பந்தயத்தில் தோழர் மணி பங்கு கொண்டு 28 நிமிஷம், 28 விநாடியில் பந்தயத்தை முடித்து வெற்றி பெற்றார்.

அடுத்தபடியாக கோயம்புத்தூரில் நடைபெற்ற 'ஒலிம்பிக்' பந்தயத்தில் 500 மீட்டர் தூர துரிதப் போட்டியில் இரண்டாவதாக வந்தார் தோழர் கிருஷ்ணன் என்பவர் முதலாவதாக வந்தார், பின்னர் மார்ச் மாதத்தில் 15 மைல் தூரப் போட்டியொன்று நடைபெற்றது. அதில் மணி இரண்டாவதாகவும், கிருஷ்ணன் மூன்றாவதாகவும் வந்தனர். பின்னர் 1948 ஆகஸ்ட் 15-ல் ஈரோட்டில் 36 மைல் தூரப் பந்தயம் ஒன்று நடைபெற்றது. அதில் முதல்வராக வந்தவர் தோழர் மணி.

1949 பிப்ரவரியில் 3000 மீட்டர் பந்தயத்தில் தேமா கிருஷ்ணனைத் தோற்கடித்தார் அப்பொழுது அவரது வெற்றியின் உச்சநிலைஅளவு (Record) 5 நிமிஷம் 6-1/5 விநாடியுமாகும். அப்பொழுது தோழர் கிருஷ்ணனின் ரிகார்டு 5 நி 32-2/5 விநாடியாயிற்று.

பின்னர் மைசூர் 'ஒலிம்பிக்' பந்தயத்தில் ஈடுபட்டு 1000 மீட்டர் பந்தயத்தில் முனியப்பாவுக்கு இரண்டாவதாக வந்தார். 1948 மே மாதத்தில் தென்னிந்திய [illegible] 'டைம் ட்ரயல்' பந்தயத்திலும் 1000 மீட்டர் 'ஸ்பிரின்ட்' பந்தயத்திலும் பங்கு கொண்டு இரண்டாவதாக வந்தார்.

அடுத்த ஆண்டில் தோழர் மணி அமோகமாக வெற்றி பெற ஆரம்பித்தார். கோவையில் வரிபாத் அவர்களையும், மைசூரில் முனியப்பாவையும் தோற்கடித்துப் புதியதோர் வெற்றி எல்லையை (Record) ஏற்படுத்தினர். அதாவது 2000 மீட்டர் பந்தயத்தை 14 விநாடியில் முடித்தார். (உலக ரிகார்டு 12 விநாடி என்பது ஈண்டு கவனிக்கவேண்டியது.)

தோழர் மணியின் வெற்றிகளுக்குக்காரணமாக இருந்தவர் ஜெர்ரிவில்ஸன் என்பவராகும். ஜெரிவில்ஸ் பம்பாயைச் சேர்ந்தவர். இவர் ஒரு முன்னாள் சைக்கிள் வீரராகும். இவரைத் தோழர் மணி முதன் முதலாக பெங்களூரில் சந்தித்தார். அன்று முதல் தோழர் வில்லயனே மணிக்கு இத்துறையில் ஆசிரியரானார்.

பந்தயங்களில் பங்கு கொள்ளுவதற்கு வேண்டிய உடற்கட்டும், ஆரோக்கியமும் பொருந்தப்பெற்றவர் இவர் ஏறக்குறைய 6 அடி உயரமும், அகன்ற மார்பகமும் உடையவர். கடந்த உலக போரிலே அர்ரான், பர்மா, சிங்கப்பூர் முதலிய போர் முனைகளில் பணியாற்றியுள்ளார். உயர எழும்பும் பயிற்சி மிகுடையவர். 'வாலிபால்' 'கால்பந்து' முதலிய பந்தாட்டங்களில் மிகுதிய பற்றுடையவர். பர்மா போர்முனையில் இவர் ஆற்றிய திறமைக்காக இவருக்கு 'உதிபோகஸ்தர் உடைவாள்' பரிசாக வழங்கப்பட்டது.

இவர் 1924-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிறந்தார். இப்பொழுது சென்னை, கிரம்டன் எஞ்சினீரிங் கம்பெனியில் அலுவல பார்த்து வருகிறார்.

யோகவித்தை மீது பிரிட்டிஷார் மோகம்

லண்டன், ஏப்ர. 1—

யோகாஸனங்கள் செய்வதன் மூலம், நோய்வினைகளை நிமூர்சமாக இருக்கச் செய்யலாம் என்கிற எண்ணம் பிரிட்டிஷாரிடையே பரவி வருகிறது.

ஒருவர் இந்த யோகாஸனப் பயிற்சிகளை கட்டாயமாக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்.

சிரஸாஸனம் செய்வதன் மூலம் உடல் முழுவதற்கும் நல்ல ரத்தம் ஓடுகிறதென்றும், வயது முதிர்ந்ததால் தளர்ந்ததால் தளர்ந்துபோன தசைகள் வலுப்பெற்று சீர்படஇந்தப் பயிற்சி மிகவும் உபயோகமானது என்று சர் பால் டியூக்ஸ் கூறுகிறார்.

சிரிப்பது, கொட்டாவி விடுவது, பாடுவது இவைகளால் மூச்சு விடுவதால் அபிவிருத்தியடைகிறதென்றும், அவைகளின் சிரிப்பின் மூலமே அதிக நலன் ஏற்படுகிறதென்றும் அவர் கூறுகிறார்.

ஸர் பால் டியூக்ஸ் ரஷ்ய புரட்சியின் பொழுது பிரிட்டிஷ் ரகசிய சர்வீஸ் ஏஜெண்டாக ரஷ்யாவில் இருந்தார். அப்போதான் இவர் யோகவித்தை பயின்றார்,

144 மொழிகள் தெரிந்தவர்!

இத்தாலியைச் சேர்ந்த போலோக்னுவாசியான கார்டினல் மெஸோபாந்தி என்பவர் உலகிலேயே மொழிகளை அதிகமாக அறிந்தவராவார். அவருக்கு 114 மொழிகள் தெரியும், ஒவ்வொரு மொழியையும் மிகவும் சிறப்பா[illegible] [illegible] கற்றுணர்ந்தா[illegible] [illegible]

ஆனால் இவர் ஒரு விஷயம் என்னவென்றால், அவரது ஆயுட்காலத்தில் ஸ்வதேசத்தை விட்டு வேற்று நாட்டுக்குச் சென்றதே யில்லையாம்டி.

பிரிட்டிஷ் யுவதிக்கு எஞ்ஜினியர் பதவி

லண்டன், மார்ச். 31—

சிறு பிராயம்முதற்கொண்டே எஞ்ஜினியராக ஆகவேண்டும் என்று விரும்பிய பிரிட்டிஷ் யுவதி எலெக்டிரிகல் எஞ்சினியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் அப்ரீகேஷனில் முதல் வகுப்பில் தேறியிருக்கிறாராம்.

வரியில்லாத நகரம்

டெயில் ராமிக் என்னும் நகரம் சர்வதேச சாதிதக் கம்பெனிக்குச் சொந்தமானது. நற்சமயம் அதன் மொத்த ஜனத்தொகை 3000 ஆகும். ஆரோக்கிய வசதிகளுடன் கூடிய வீடுகளும் மனோரம்யமான சூழ்நிலை காணமுள்ளது. அங்கு வாழ்பவர்கள் அனைவரும் கம்பெனியைச் சேர்ந்தவர்கள்.

அந்நகரில் வசிப்பவர்கள் எவரும் எவ்வித வரியும் செலுத்த வேண்டியதில்லை. மில் தொழிலாளர்கள் மட்டும்தான் அங்கு வாழலாம்.

அவல வாழ்வு!

த. சி. வே.

‘விசித்திரம்’ பத்திரிகையின் ஆசிரியர் தோழர் அநாமதேயம், தன் மேசை மீது கிடந்த காகிதங்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது முகத்திலே என்றுமே காணப்படாத அளவு கோபம் குடிகொண்டிருந்தது.

“கதையாம்! கதை! கண்ட குப்பைகளையெல்லாம் எழுதித் தொலைத்து நம்ம உயிரை வாங்குகின்றன. ஏதாச்சும் உருப்படியான கதையோ, கட்டுரையோ இருக்கா போட்டுத் தொலைச்சுடலாமின்னு பார்த்தா! ஒண்ணும் கிடைக்கலியே!” என்று அநாமதேயத்தின் வாய் முணுமுணுத்துக்கொண்டிருந்தது.

மறுநாள் காலைக்குள் எப்படியேனும் பத்திரிகை வெளி வந்தாக வேண்டும். அதற்குள் நல்ல விஷயமாக நாலு விஷயம் தயாரிக்க வேண்டும் என்று முயன்று பார்த்தார். முடியவில்லை. அவ்வளவு தூரம் வறண்டுவிட்டது ஆசிரியரின் மூளை. ஆம்; எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம் மூளை தானே. அதுவே வறண்டு கிடக்கும் போது, ஆசிரியரின் மூளை வறண்டுவிட்ட கேட்கவாவேண்டும்? என்ன செய்வதென்று பார்த்தார். ஒன்றுமே புரியவில்லை. இதுதான் அவரது அன்றைய கோபத்துக்கே காரணம்.

எழுத்தாளர் யாரேனும் நல்ல விஷயமாக, புதியதாக ஏதேனும் எழுதி அனுப்பியிருக்கிறார்களா என் [illegible] ...திருந்த கதைகளாகவும் கட்டுரைகளாகவும் தான் காணப்பட்டன. ஆனால் புதிய சரக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை.

சில விஷயங்கள் ‘புரட்சி’ என்ற பெயரில் குத்து, வெட்டு, கொலை போன்ற வார்த்தைகளால் ஆசிரியரைப் பயமுறுத்தும் வண்ணமிருந்தன. வேறு சில, தமிழ்ப் பற்று என்ற முறையில் “தமிழா உறங்காதே! ஒரு விழி, நிமிர், நட, ஓடு, எடு வாளை, வெட்டு, வீழ்த்து” என்றெல்லாம் ஆசிரியரை “டிரில்” செய்ய உத்தரவிடுவனவாயிருந்தன. இவற்றையெல்லாம் கண்டுதான் ஆசிரியர் அநாமதேயத்துக்கு அடங்காத கோபம் வந்தது. ‘இதென்ன பெரிய தொத்து வியாதியாய் விட்டதே இந்த எழுத்தாளர்களுக்கு’ என்று தலையில் அடித்துக்கொண்டார். பின்னர் ஒருவாறு கோபம் தணியப்பெற்றவராய் பாக்கெட்டிலிருந்து சிகரெட் பெட்டியை எடுத்து, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு ஏதோ எழுத ஆரம்பித்தார்.

“வணக்கம் சார்!” என்று சொல்லிக்கொண்டே அவரது நண்பர் நாகரிகம் அங்கு வந்தார். நண்பரைக் கண்ட அநாமதேயத்துக்கு மீண்டும் கோபம் வர ஆரம்பித்தது. “இது ஏதடா சனியன்” என்று அவர் வாய் சொல்லவில்லை, உள்ளம் சொல்லிற்று என்றாலும் நிலைமையை சமாளித்துக்கொண்டு ‘ஓ! நீங்களா, வாங்க சார், உட்காருங்கோ. என்ன விசேஷம்? ஏதேனும் அவசரமான செய்தி உண்டோ?” என்று கேட்டார். அதாவது அவசரமான செய்தியிருந்தால் சொல்லிவிட்டுப் போய்விடுங்கள். வீணாகத் தொந்தரவு செய்யாதீர்கள் என்று சொல்லாமல் சொல்லிப் பார்த்தார்.

நம்மவர்களுக்குத்தான் குறிப்பறியும் குணம் கிடையாதே! வந்தவர் “அப்படி ஒன்றுமில்லே சார், உங்களைப் பார்த்துட்டுப்போகலாமின்னு வந்தேன். போன வாரம் நீங்க எழுதியிருந்த ஆர்ட்டிகல் ரொம்ப நல்லா யிருந்துச்சு சார்! அப்படித்தான் காரசாரமயிருக்கணும் பாருங்கோ...... நம்ப மினிஸ்டரியிலே நடக்கிற ஊழல்கள் உண்டே, அடடா... சொல்ல முடியாது சார்! அதனாலேதான் சார் பிளிட்ஸ் பத்திரிகைக்காரன் வெளு வெளுன்னு வெளுத்து கட்டுறான்! ...என்று மளமளவென்று பேச ஆரம்பித்துவிட்டார். அருகிலிருந்த நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்துகொண்டு.

பார்த்தார் அநாமதேயம், பேச்சை வளர்த்தினால் வந்தவர் சீக்கிரத்தில் போகமாட்டார் போலிருக்கிறதே என்று எண்ணி, அவரது பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து வந்த [illegible] ...த்தின் மூலம் பேச்சை மாற்றிப் பார்த்தார். வந்தவர் ஆசிரியரின் தந்திரத்தால் ஏமாறுபவராக இல்லை.

“ஆகா, எல்லாம் சௌக்கியமாஇருக்காங்கோ.. அதிருக்கட்டும் இதைக் கேளுங்கோ சார்”...என்று தொடர்ந்து பேசஆரம்பித்து தமிழ்நாட்டு அரசியல், அகில இந்திய அரசியல், சர்வதேச அரசியல் பற்றியெல்லாம் மூச்சைப் பிடித்துக்கொண்டு பேசிமுடித்தார்..

அதுவரையில் ஒரு வார்த்தைப் பேசாமல் அவற்றையெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார் ஆசிரியர் அநாமதேயம். ஏனென்றால் இடையிலே பேச்சுக்கொடுத்தால், வந்தவரின் வாய் வீச்சு அதிகரித்துவிடுமோ என்ற பயம்!

சுமார் அரை மணி நேரம் பேசியபின், தோழர் நாகரிகம் தனது சொற்பொழிவை நிறுத்தினார். மழை பெய்துவிட்டாற்போலிருந்தது ஆசிரியர் அநாமதேயத்துக்கு.

சுமார் அரை மணி நேரம் பேசியபின், தோழர் நாகரிகம் தனதுசொற்பொழிவை நிறுத்தினார். மழை பெய்துவிட்டாற்போலிருந்தது ஆசிரியர் அநாமதேயத்துக்கு.

‘சரி, அப்படியானால்...நான் போயிட்டு வர்றேன். நீங்க ரொம்ப டயர்டா இருக்கிங்க போலிருக்கு...‘டிஸ்டர்ப்’ பண்ணப்படாது...நான் வரட்டுமா?” என்றார்.

“ஆகா, அப்படியே செய்யுங்கோ!”என்று அகமகிழ்ந்து பதில் கூறி வழியனுப்பிவைத்தார் ஆசிரியரும்.

வந்தவர் போன பிறகு மற்றொரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டே ‘ம்ம், இதெல்லாம் சுத்த நியூசென்ஸ்: கொஞ்சம்கூட மேனர்ஸ் தெரியாத ஆட்கள். என்னடா, வேலை சமயத்திலே ‘டிஸ்டர்ப்’ பண்றமேயின்னு கொஞ்சங்கூடத் தெரியறதில்லை. அரை மணி நேரமாக லெச்சர் பண்ணிட்டு, ‘டிஸ்டர்ப்’ பண்ணக்கூடாதுன்னு சொல்லிட்டுப் போற புத்திசாலியை என்னவென்று சொல்லுவது” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார் அநாமதேயம்

இடையிலே ஏற்பட்ட தொந்தரவை நினைத்து நினைத்துக் கோபப்பட்டார். ஏற்கனவே ஆசிரியர் அநாமதேயத்துக்குப் பல தொல்லைகள். வீட்டுக் கவலை வேறு. இந்நிலையிலே நாட்டுக் கவலையும் ஏட்டுக் கவலையும்சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும்! எழுத நினைத்த விஷயம் இடையிலே ஏற்பட்ட சொற்பொழிவால் அவரது சிந்தனையைவிட்டே அகன்றுவிட்டன. எல்லாம் அவருக்குக் குழப்பமாகவே இருந்தது.

[illegible] மொழி பெயர்ப்பு ஆக [illegible] வதுவிஷயம் கிடைக்குமாவென்று. ஆனால் அமைதியில்லாத சூழ்நிலையில் மொழிபெயர்ப்பு செய்வதென்பது அவ்வளவு எளிய காரியமல்ல. மொழிபெயர்ப்பில் பொழுதைப் போக்குவதைவிட, தானே ஏதாவது எழுதிவிடுவது மேல் என்று தோன்றிற்று அவருக்கு. ஆகவே அந்த முயற்சியையும் கைவிட்டுவிட்டு மீண்டும் தனது சொந்த முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார்.

“சார், இந்தத் தபால் நேற்றுமாலைவந்தது. உடனே உங்களிடம் கொடுக்க வந்தேன். அதற்குள் நீங்கள் வீட்டுக்குப் போய்விட்டீர்கள்” என்று சொல்லிக்கொண்டே ஆபீஸ் பையன் ஆறுமுகம் ஒரு கடிதத்தை ஆசிரியரிடம் கொடுத்தான்

அவசரமாக அதை வாங்கிப் பிரித்துப் படித்தார் ஆசிரியர். அதில் ‘அன்புடையீர், விபரீதத்தின் பொங்கல் மலர் அடுத்த வாரம் வெளிவரப் போகிறது. இதுகாறும் தங்களுடைய கதையோ, கட்டுரையோ கிடைக்கப்பாடில்லை. வருந்துகிறோம். விரைவில் அனுப்பிவைக்கவும். வணக்கம்.

அன்பன் அதிசயசாமி,
ஆசிரியர் “விபரீதம்”

என்று எழுதப்பட்டிருந்தது. இக்கடிதம் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலிருந்தது ஆசிரியருக்கு. ஆத்திரத்தோடு அக்கடிதத்தை மடித்து பக்கத்திலிருந்த பெட்டியில் எறிந்தார்.

இதே நேரத்தில் கம்பாஸி...ர் கந்தசாமி அவர் முன் தோன்றினான். அவனுடைய பார்வை “கம்போஸ் செய்ய மேட்டர் தேவை” என்று கேட்பது போலிருந்தது.

“என்னப்பா மேட்டர் தேவையா, போ. இதோ கொஞ்ச நேரத்தில் அனுப்பிவிடுகிறேன்” என்று சொல்லிவிட்டு எழுத ஆரம்பித்தார்.

மூன்று வரிகள் எழுதினால் அதில் இரண்டு வரிகளை அடித்துவிடுவார்; மீண்டும் எழுதுவார்; இப்படியாகவே எழுதி எழுதிப்பார்த்தார். ஒன்றும் சரியாக வரவில்லை. எதை எழுதுவது, எப்படி எழுதுவது, நாம் எழுதும் விஷயம் பிறர் ரசிக்கக்கூடியதாகஇருக்குமோ இருக்காதோ, இப்படிப்பட்ட தொல்லைகளுக்கிடையே எதையேனும் கிறுக்கித் தொலைத்துவிட்டால் பெயர் கெட்டுவிடுமேஎன்றெல்லாம் யோசித்தார்.

ஆசிரியர் அநாமதேயம் தனது பெயருக்கேற்ப அசல் அநாமதேயமாகவே விளங்கினார். ஆசிரியராக இருப்பதற்கு வேண்டிய ரத, கஜ, துரக, பதாதிகளான பட்டம், சீர் செல்வாக்கு, ஆடம்பரம், அந்தஸ்து இன்ன பிற இயல்புகளுக்கும் அவருக்கும் வெகு தூரம்! நாட்டுப்பற்று மொழிப்பற்று என்பன போன்ற சில வைத்தியக்காரத்தனமான பற்றுக்களில் சிக்கி விட்ட காரணத்தால் துரதிர்ஷ்டவசமாக பத்திரிகாசிரியர் பணியை மேற்கொண்டு, த [illegible] ...வேறுவழியின்றி [illegible] அப்பாவிகளி [illegible] ...மதேயமும் ஒரு [illegible] விசித்திரப்பிறவியின் [illegible] நிரம்பிய வேளைகளில் ஒன்றுதான் மேலே சித்தரித்துக்காட்டப்பட்டிருக்கும் நிகழ்ச்சி.

“சார், நேரமாகிறது” என்றான் காம்பாஸிட்டர் கந்தசாமி அண்ணாந்து பார்த்தார் அநாமதேயம். எதையாவது எப்படியாவது எழுதித் தொலைப்பது என்ற முடிவுக்கு வந்தார். ‘கொஞ்சம் பொறு’ என்று சொல்லிவிட்டு எழுதப் போகும் நேரத்தில், கையில் ஒரு கடிதத்துடன் எதிரில் ஒரு ஆள் திடீரென காட்சி தந்தார்.

“இந்தாங்க சார், டாக்டர் அனுப்பினார்” என்று சொல்லி கையிலிருந்த கடிதத்தைஅநாமதேயத்திடம் நீட்டினான் அவசரமாக அதை வாங்கிப்பிரித்தார் அநாமதேயம். அவரது முகத்திலே ஒரு திடீர் மாற்றம், கவலைக் குறி முதலியன தோன்றின, இதற்குக் காரணம், டாக்டர் அனுப்பிய அந்தக்கடிதமே. அக்கடிதத்துடன் மருந்து விலைப் பட்டியலும் வைக்கப்பட்டிருந்தது. அப்பட்டியல் தொகை 15 ரூபாய். அநாமதேயத்துக்குக் கவலை அதிகரித்தது. வந்த பையனைப் பார்த்து “சரி, நான் நாளைக்கு வந்து டாக்டரைப் பார்க்கிறேன் என்று சொல் போ.” என்றார்.

“அதெல்லாம் இல்லே சார், கையோடே பணம் வாங்கிட்டு வரச்சொன்னார் டாக்டர்” என்றான் பையன்.

“அது சரிதாம்பா, போ, நானே கொண்டுவருகிறேன் என்று பையனுக்குப் பதில் சொல்லி அனுப்பிவிட்டார். இதற்குள்மணி 12க்குமேலாகி விட்டது. ஆபீஸ் பையன் ஆறுமுகம் இரண்டாவது தபாலைக் கொண்டுவந்து அவர் முன் வைத்தான். ஆசிரியர் அவற்றை ஒவ்வொன்றாகப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார். வழக்கம்போல் தூற்றுதல், போற்றுதல், தேற்றுதல் முதலிய படலங்களைக் கொண்ட கடிதங்கள் பல காணப்பட்டன. இடையிடையே அவருக்குச் சொந்தமான சில கடிதங்கள் சிலவும் காணப்பட்டன.

இவை எல்லாம் ஒருபுறமிருக்க அதிசயிக்கத் தக்க மற்றொரு விஷயமென்னவென்றால், “மிதிபாகற்காய் கசக்கும், எனினும் அந்த மேற் கசப்பின உள்ளேயும் சுவையிருக்கும்” என்று புரட்சிக் கவிஞர் கூறியுள்ளது போல், கவலையும் கலக்கமும் கலந்த சூழ்நிலையிலிருந்த அவருக்குக் கிடைத்த பல கடிதங்களுக்கிடையே. ஒரு காதல் கடிதமும் காணப்பட்டது. இதோ அக் கடிதம்:—

மங்களபுரி
1-4-50

அன்பரே.

வணக்கம், சொல்லுவது யாருக்கும் எளிது. சொல்லியவாறு செய்வது அரிது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அதனைத் தாங்கள் மெய்ப்பித்துவிட்டீர்கள் போலும்! தங்களுடைய எழுத்தோவியம், சொல்லோவியம் அனைத்தும் எட்டளவோடுதானா? அன்று நாம் என்னென்ன பேசினோம், எப்படியெல்லாம் திட்டமிட்டோம் என்பதை எல்லாம் மறந்துவிட்டீர்களா? அழகும், பணமும் தான் பெண்களை ஏமாற்ற வல்லவை என்று இதுகாறும் எண்ணியிருந்தேன். ஆனால் அறிவும் அந்த ஏமாற்றுக் கலையை கற்றுக்கொண்டுவிட்டது என்பதை இன்றுதான் உணருகிறேன். ஏன் என்னை இப்படி சோதிக்கிறீர்கள்? இன்னும் எத்தனை நாளைக்கு எனது காதல் தண்டனையை நீடிக்கச் செய்வதாக உத்தேசம்? இன்றேல் தங்களுடைய நாட்டம் திசை மாறி விட்டதா? காரணம் என்ன? ஏன் இன்னும் ஒரு முடிவுக்கு வராமல் இப்படி மௌனம் சாதிக்கிறீர்கள்? விரைவில் பதில் காண விழையும்,

தங்களை மறவாத
கனகவல்லி

இக்கடிதம் கண்டு திடுக்கிட்டார் ஆசிரியர்.

(தொடரும்)

நிறத்துவேஷத்தை எதிர்த்துப் போராட்டம்

லண்டன், மார்ச். 31 — நிறத்துவேஷத்தை எதிர்த்துப் போராட்டத்தை நடத்திவரும் ரெவ. ஸ்காட் பாதிரிக்கு ‘இருண்டிமன் ஆக்ஷன்’ இயக்கம் என்ற ஸ்தாபனத்தின் மனப்பூர்வமான ஆதரவு கிடைத்திருக்கிறது. இதை அவரே நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

பாஸ்ரா அருகில் புது எண்ணெய் ஊற்றுகள்

பாக்தாத், மார்ச். 30 — பாஸ்ராவுக்கருகில் புது எண்ணெய் ஊற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

வரலாற்று ஏடுகளில்....!

[மெய்யழகன்]

விந்தியத்தின் விளிம்பைத் தாண்டி, தென்னகத்தைத்தன் நலடியில் முத்தமிட, கையிலே வீரவேலேந்திப் போர்க்கோலம் புனைந்து விரைந்தோடி வந்தான் 'ஹர்ஷவர்த்தனன்!'

கன்னோசியைத் தலைமைப் பீடமாகக்கொண்டு, சிந்துநதித்தீரத்திலிருந்து கங்கை முகத்துவாரம் வரை, தன் ஆதிக்கத்தைத் தரவல் செல்லும்படி செய்து பாராண்ட மாபெரும் வீரன்-தீரன் ஹர்ஷன்!

அது ஆண்டோன், கையிலேந்திய வீரவாளை உறையிலிடாமலும், லாயத்திலே குதிரைகளைக் கட்டாமலும், இடைவிடாது போராடிவந்த, அம்மாவீரனை-தென்னகத்தின் வடமுனையில் பாராண்ட, மாபெரும் இரணகளச்சூரன் இரண்டாம் புலிகேசி-நர்மதைநதித் தீரத்தை நடுமையமாக வைத்துக்கொள்ளும்படி தோற்கடித்துவிட்டான்!!

ஆதிக்கப்பெருக்கத்தை, ஆழத்தில் புதைத்துவிட்டு, அன்பு ஆட்சியின் மூலம் அவனிவாழ் மக்கட்தம் உள்ளத்தின் அன்புக்கலைக்கூடனுள் ஹர்ஷன்! மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்து, நானிலம் புகழும் வண்ணம் அரசோச்சினான்!

ஹர்ஷனின் பெரும் புகழ் வெளிபுலமெங்கும் எக்காலிகொட்டிப் பூரித்தது! அவன் பௌத்தசமயத்தைச் சார்ந்தவனாதலால், அம்மதத்தின் மாண்பை, பார்முழுதும் பரப்ப, தலைநகருக்கருகிலுள்ள நாளந்தாவில் ஓர் பெரிய பல்கலைக் கழகத்தை நிறுவினான். இலங்கை, சீனம், சாவகம் முதலிய வெளிநாட்டிலிருந்து, நாளந்தாவில் கல்விபயிலுவதற்காக ஏராளமான மாணவர்கள் வந்து, கல்வி பயின்றனர்! சாந்த சொரூபிபுத்தனது உத்தமமான கொள்கைகள் மக்களை அரவணைத்து, அன்புப் பணி புரிந்தது!

ஹர்ஷனின் அகண்ட ஆதிக்கச் சோலை முழுவதும் பௌத்தமதனது நீடுபுகழை நிலைநாட்டி நின்றது! தனது புகழ் மங்கிவிட்டது! தன் மதம் ஓங்கிவிட்டது-ஆதரவிழக்கத்தால்! பௌத்தத்தை ஒழித்தே தீரவேண்டும்! அதற்காக, படுநாசங்கள் விளைந்தாலும் பாதகமில்லை!! என்று கயமைக் குணங்கொண்ட சில குதர்க்காரர்கள்-ஆரியர்கள் அங்காங்கே உலவினர்!

கங்கை நதித்தீரம், ஞாயிறுன், செக்கச்சிவந்த அடிவானத்திலே செங்கதிர்களைப் பாய்ச்சிக்கொண்டிருந்தான்!

வானுற ஓங்கிய, வளம்பொழிச் செழுமைபடைத்த மரங்கள் நதிக்கரைகளின் இரு மருங்கிலும் இருக்கும் காட்சி, பார்ப்பவர்களின் கண்களுக்கு மாட்சியைத் தருகிறது!

ஆற்றிலே நீர், ததும்பிக்கொண்டு சல, சல வென வெண்நாதமுடன்; நுரையும் நுரையுமாக வழிந்து ஓடிக்கொண்டிருக்கிறது. வெண்கதிரவனின் கிரணங்கள், நீரிலே படிவதால், தங்கத்தைப் போல் தகதக வென ஒளிவிடுகிறது நீர்!

சில வெண்ணிறப் பறவைகள் தண்ணீரில் அடிக்கடி மூழ்கிவருவது; பசுமை மரங்களின் கிளைகள் நீரில் மூழ்கிக் கொண்டிருப்பது, தென்றல் காற்றுடன் மங்கையைப் போல் ஆடிக்கொண்டிருப்பது; அதனூலே மரங்களின் சல, சல; ஒலி புள்ளினங்களின் 'கீச்சு'க்குரல்! இத்தனையும் சட்டென விழியாலே பருகிக்கொண்டே ஓர் இளம் யுவதி நதிக்கரையில் குளித்துக்கொண்டிருந்தாள்! அந்த இளமங்கையைத் தவிர, வேறு எந்த மனிதரும் அங்கில்லை, ஏன்...? ஆற்றில் ஒருபடகு கூட, அப்போது இல்லை!

தலைவாரித் துணிகளை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு, நீர்க்குடத்தை எடுத்து தண்ணீர்மொண்ணும் வேளையில் ஓர் படகு அவளது விழிகளுக்கு விருந்திட்டது! அப்படியே படிக்கட்டில் உட்கார்ந்து விட்டாள்! 'குடம்' தானே சுழன்ற வண்ணம் நீரில் மிதந்தோடியது!! விழிக்கடைகளை குடத்தின்மீது செலுத்தினள் ஐயோ! என்ற ஒலி எழுந்துவிட்டாள்! அவளை விட்டு ஒரு பாகம் குடம் சென்றுவிட்டது-அதுவரை அவள் நதிருப் பார்வை எங்கு சென்றது?

அந்தப் படகிலே, படகோட்டி தண்டை வலித்துக்கொண்டு வந்ததால், அவனது பார்வை அந்த மங்கையின்மீது விழவில்லை! அவனுக்கு எதிர்புறம் படகிலே அமர்ந்திருந்த ஓர் கட்டிளம் காளை அந்த இளமங்கையின்மீது பார்வை செலுத்திக்கொண்டு வந்தான்! சோழிக்குஞ்சு, வல்லூறுவின் பார்வைக்குப்பட்டால்......! ?

அவளது விழி அம்புகளுக்கு ஆட்பட்டு, அவனது விழி அம்புகளும் எதிர்க்கணைசெலுத்தினது? படகும் அருகில்வந்துவிட்டது! எதிர்க்கணைகளைவிட்டுச், என்ன பயன்? "கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"... என்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு அந்த மங்கை வாலிபனும் விழி... பேசின...!!

[torn]

"கண்ணொடு கண்... வாய்ச்சொற்களுக்கு என்ன வேலை?" இத்தகைய நிலையில்தான் அவள், ஆம்! அந்த இளநங்கை குடத்தைக்கண்டு கூச்சலிட்டாள்! அதைக் கண்ணுற்ற, அந்தக் கட்டிளங்காளை, திடீரென்று நீரில் குதித்துவிட்டான்! 'சாந்த சக்தி வாய்ந்தகாதல் இருக்கும்பொழுது!'

அந்த இளைஞன் நீரில் குதித்ததை கவனிக்காதபடி வந்தப் படகோட்டியும், படகும் நீரில் மூழ்கினர்; அந்த இளைஞன் குடத்தை எடுத்துக்கொண்டு கரைவந்துசேர்ந்தான். 'ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்ற மொழிபோல அந்த யுவதி கரையில், அத்தகைய ஏக்கத்துடன் நின்றுகொண்டிருந்தாள்!

இரு இளம் புறாக்களும் கரையின் மீது சென்றனர் அவர்களது கருவிழிகள் பேசியதை அறியாமையால் அதனால்தான் 'பொருத்த'மான வேண்டும்!!

"இருவரு மாறிபுக்கு இதயம் தந்தனர்"!

பாடலிபுத்திரம். சந்திரகுப்த மௌரியனால் நிர்மாணிக்கப்பட்ட தலைமை நகரம், அந்த அரசனுக்குதவி செய்த சாணக்கியனது சந்ததியார்கள் ஆரியர்கள் ஒன்று கூடினர் ஆரியமதம் ஆதிக்கப் பரந்துவிடத்ததாக, அவர்கள் ஒன்றுகூடி-சதி செய்தனர்! 'பௌத்த'மதத்தினர் மீது போர் தொடுக்க!!

பௌத்த சமயத்தை அழிக்க ஆரிய சமயம் சூழ்ச்சி செய்தது! 'பழிக்குப் பழி வாங்க'". ஒருவர்.

"வாக்கியமே தீரவேண்டும்! அதற்கு வழி..." இன்னொருவர்.

"நாளாந்தா பல்கலைக் கழகத்தை தீக்கிரையாக்கவேண்டும்!" பொறுமியபொண்டு ஒருவர் அழிகூறினர்.

"என்னோ? நமது இனத்தான் ஒருவன் அரசசபையில்—'மாணம்' என்னும் ஆரியன் இருந்தும், நமது மதம் செல்வாக்கிழந்துவிட்டதே" என்று புருவத்தை நெறித்துக் கொண்டு ஒருவர் கூறினர்!

வஞ்சக ஆரியர்கள் ஒன்றுகூடி நாளாந்தாவில் ஒரு நள்ளிரவில் தீ மூட்டுதல் வேண்டும் என்று திட்டம் வகுத்து, கலைந்தனர்!

பிரம்மாவின் முகத்தின் வழித் தோன்றிய சற்புத்திரர்களல்லவா; அவர்களின் கோபம் பாமனின் நெற்றிக்கண்ணல்லவா!! பழைய ஏடுகளைப் புரட்டி, தீ மூட்டுவதற்கு நல்லநாள் ஒன்றைக் குறித்தனர்!!!

வரலாற்று ஏடுகளிலே, சோகமான இரத்தக்கறை படிந்த, ஒரு பெரும் பாதகமான எண்ணத்தை எதிர்கால உலகுக்கு விண்ணப்பித்துக் கொண்டு விட்டது, 'ஆரிய தர்மம்!'

நதித்துறை,

படிக்கட்டின் மீது, அந்த இளைஞனும், யுவதி அமர்ந்துகொண்டிருந்தனர்.

மௌனம் நிலவியது, அவர்களுக்கிடையே! "தாங்கள்...யார்?... நாளிபுடை"...என்று இமூர்த்தம் போல் கேள்விக் குறி எழுப்பினள் மௌனத்தைக் கிழித்துக்கொண்டு! அந்தமங்கை.

இந்த எதிர்பாராத கேள்வியைக் கண்டு திக்பிரமையடைந்து விட்...

[torn]

...அவனுக்குத்தான் ... அவிழ்ந்துள்ளேன்!! என்று பதில் இறுத்தான்.

"புத்தமதம்...காவிபுடை" என்ற சொற்களைக் கேட்டு, அந்த மங்கை மருட்சியடைந்துவிட்டாள்!!

அந்த இளைஞன் அவளது முகத்தின் தோற்றத்தைக் கண்டு, 'நீ ஏன் பயந்துவிட்டாய்" என்று அவளதுமலர் கரங்களைப்பற்றிக்கொண்டு கேட்டான்!

"தங்களது கொள்கைக்கு முற்றிலும் மாறுதலான கொள்கைகளைக் கொண்ட 'ஆரியமதம்'...அதைச் சேர்ந்தவள் நான்!...எனது இருப்பிடம்...அருகிலுள்ள பாடலிபுத்திரம்...என்னுடைய தந்தை, ஊரிலே 'பெரிய மனிதர்'..." என்று கண்ணீரை வடித்துக்கொண்டே கூறினள்!

அந்த இளைஞன் "இதற்காகவா? பயப்படுகிறாய்!...நான் என்றும் உன்னை கைவிடமாட்டேன்...ஏன்? கண்ணீரை வடிக்கிறாய்!" என்று கூறி, அவளது விழி விளிகளிலிருந்து வழியும் நீரைத் தம் கையால் துடைத்துக்கொண்டு, "நீ...இன்னும் இரண்டு நாட்கள்...பொறுத்திரு...அதற்குப்பின்...நீ இந்த இடத்திற்கு...வந்துவிடு...நான் உன்னுடன் என் தேசத்திற்குப் போய்விடலாம்" என்று மேலும் கூறி முடித்தான்.

இந்தச் சமயத்தில், அந்த இளமங்கை கலகலவென, தன் வெண்பற்களைக் காட்டி, சிரிப்புப் பண் பாடினள்! அந்த இளைஞனும், அந்தச் சிரிப்பில் கலந்துகொண்டான்!! அந்த யுவன் எழுந்து, அவளது இடையில் ஒரு கையும், கரங்களில் ஒரு கையையும் பற்றிக்கொண்டு கைகோர்த்த வண்ணம் அந்த இளம் புறாக்கள், 'தென்றல் புலவி' ...நீந்திக்கொண்டே......களைவிட்டு சென்றன!!

* * *

வானமண்டலத்தை இரவிலே ஆளும் உரிமைகொண்ட அரிவை குமரி 'நிலவு', அந்த வேளை காணவில்லை! அவளது மணிப்பெண்களான நட்சத்திர'தாரகை'களும் அன்று இல்லை!!

'நாளாந்தா' நகரம், பல்கலைக் கழகம்மாவும் 'தீப்பிழம்'புக்களுக்கு ஆட்பட்டு, அகோரமாக 'எரிந்து' கொண்டிருந்தது! செஞ்ஞாயிற்றின் கதிர்கள் உலகம் முழுவதும் பரவுவதைப்போல் அந்நேரத்தில்பிடித்த தீயின் 'எதிரொலி', அந்தச் சுற்று வட்டாரம் முழுவதும் பரவினது! கங்கை நதியின் வெள்ளப் புனலில் தீப்பிழம்பு எதிரொலித்தது!

பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மக்கள், மற்றுமுள்ள யாவரும் 'ஐய்யோ, முறையோ, ஐயோ' என்று அலறிப்புடைத்துக் கொண்டு மூலைக்கொருவராக ஓடினர்! அணைக்க முடியாமல்... மேலும் தீவேகமாக எரிந்துகொண்டிருந்தது!!

அந்தப் பல்கலைக் கழகம் முழுவதும், அங்குள்ள 'புத்தமத சின்னங்கள், விகாரைகள், நூல்கள், யாவும் 'வெந்தசாம்பலாகிக்கொண்டிருந்தன!' அந்த இளைஞனும், மற்றவர்களைப் போல, நிச்சலனமாக நின்றிருந்து 'தம்பி, ஓடவந்து' மற்றவர்களுடன் கங்கையில் நின்றான்!! பாடலிபுத்திரம்—அங்குள்ள 'சாணக்கிய'து' பரம்பரையினர் 'களிப்பில்' மூழ்கிக்கொண்டிருந்தனர்!!!

அவர்களது 'களிப்புக்கிடையே', அந்த 'இளயுவதி'யின் 'பெருமூச்சும் கலந்துகொண்டிருந்தது!' அவர்களது...மத்தியில்... அந்த இரவில்...அந்த மங்கை...என்ன செய்வாள்?... அவளது காதல்... அந்த 'இளைஞன்' என்னகதி... அடைந்தான்?...துடித்தான்! அவள் அங்கு அந்த நிலைமையில்...!

ஆனால் அவன் இங்கு ஜனங்களுடன் நின்றுகொண்டிருந்தாலும்

[torn]

...செய்வது... அவன் இப்பொழுது இருப்பது' என்ற எண்ண அலைகளிலே மிதந்துகொண்டு, அடிக்கடி அங்குள்ளவர்களில் 'அவளும்' காணப்படுகிறாளா? என்று பார்த்துக்கொண்டிருந்தான்!!

துன்பத்திலும் இன்பமா......!

'இந்த இழிச்செயலைச் செய்தது யார்? தீக்குக் காரணம் யாது? இந்த 'கெட்ட' நோக்கம் கொண்டவர்கள் எவர்? தீவைத்தது யார்? அவர்களைப் பிடி! விடாதே!" என்ற கூக்குரல்கள் பலமாக எழுந்தன, அந்த நின்றவர்களது மத்தியிலே!

"ஆரியம்...ஆரியம்...ஆரியர்..." என்று எவனோ ஒருவன் அங்கு அலறினன்!!

"ஆரியம் ஒழிக! ஆரியச் சூழ்ச்சி மடிக! சதி ஒழிக!' என்ற கூக்குரல்கள் அங்குள்ள எல்லோரது உதட்டிலிருந்து எழுந்தது!! கங்கைப் புனலும் அதை ஆமோதிப்பது போல் 'சலசல'வென ஓடிக்கொண்டிருந்தது!!

பாடலிப்புத்திர 'பார்ப்பனர்'களது சதித்திட்டத்தினால் 'பொருளும், ஆளும்' சேதமடைந்ததுமல்லாமல், வருங்கால வரலாற்றுச் சுவடியிலே ஒரு பெரும் இரத்தக் கறையைப் பொறித்துவிட்டனர்!!!

கையெழுத்தாகவில்லை

கெய்ரோ, மார்ச் 30—

இஸ்ரேலும் ஜோர்டனும் 5 ஆண்டுகால சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாக வெளியான செய்தி உண்மையல்ல என்று இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. ஆனால் சமரச உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. என்னமோ உண்மைதான் என்றுதெரிகிறது.

"நேருவையே அழைப்பேன்"

லண்டன், ஏப். 1—

பி. பி. ஸி.-யில் சாதாரண மக்களை அழைத்து அவர்களிடம் கேள்வி கேட்பது ஒரு நிகழ்ச்சி சென்றபுதன்கிழமை இந்த நிகழ்ச்சியில் ஒரு நாணுவன் மைக்ரபோன் முன்பு அழைக்கப்பட்டார்.

அவரிடம் "உங்கள் வீட்டிற்கு விருந்தினராக யாரை அழைக்க விரும்பப்படுவீர்கள்" என்ற கேள்வி கேட்கப்பட்டது. அவர் உடனே தயக்கமில்லாமல், இந்தியாவின் முதன் மந்திரி பண்டித நேருவைத்தான் என்று பதிலளித்தார்.

நகைச்சுவை நடிகருக்கு 10 லட்சம் டாலர் சம்பளம்

நியூயார்க், ஏப். 1—

சினிமா, ரேடியோ உலகில் மிகவும் புகழ்பெற்ற காமெடியனான பாப்ஹோப்பின் சம்பளம் பத்து லக்ஷம் டாலர்களுக்குமேல் போகும் என்று தெரிகிறது.

அவர் நேஷனல் பிராட்காஸ்டிங் கம்பெனியுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளவிருக்கிறார். இவருக்குதான் ரேடியோ உலகிலேயே அதிகத் தொகை சம்பளமாக அளிக்கப்படவிருக்கிறது.

இதாலி-போர்ச்சுகல் வர்த்தக உடன்படிக்கை

... 18

[torn]

...தைச் செய்துகொண்டிருக்கின்றன.

இதன்படி இதாலி மீன் உணவுப் பொருள், உலோகங்கள், மூலப் பொருள்களை இறக்குமதி செய்யும். இரும்பு எஃகு சாமான்கள், ஜவுளி ரசாயனப் பொருள்கள் யந்திரம் முதலியவைகளை ஏற்றுமதிசெய்யும்.

மனைவியின் காதை அறுத்த கணவன்

மதுரை, மார்ச். 30—

தன்னுடன் வாழாத பிச்சையம்மாள் என்பவளை ஜோதி நாயக்கன்பட்டியைச் சேர்ந்த காளி என்பவர் கத்தியால் காதை அறுத்து விட்டதாக, புகார் செய்யப்பட்டதில், ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் ஜனாப் அன்வர்கான் கோர்ட் கலையும் வரை தண்டனையும் ரூ. 250 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

அபராதம் கட்டத் தவறினால் 6 மாதம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்.

பிச்சையம்மாளும், காளியும் வாழ்க்கைத் துணைவர்கள். இவர்களிருவரும் சிறிதுகாலம் வாழ்க்கையைச் சந்தோஷமாகவே கழித்துவந்தனர்.

இவ்விதமிருக்கும்போது பிச்சையம்மாள் தன் நகைகளைக் கழற்றி, அதை விற்று விட்டாள். இதனால் சிறிது மனஸ்தாபமடைந்த பிச்சையம்மாள் மேற்கொண்டு நகைகளைத் தராது விட்டாள். இதனால் கோபமடைந்த காளி என்பவர் ஆத்திரமடைந்து தனது மனைவியின் காதை அறுத்து மூளியாக்கிவிட்டார் (க-தி)

நல்லவர்கள்?

[கே. ஜெயராமன்]

நம் நாட்டில் நல்லவர்களென்போரெல்லாம்
நா வலிக்க நல்லுரைகள் சாற்றுகின்றார்;
தம் வீட்டில் நுழைந்திடவோ மீட்டுகின்றார்
பைரவி இராகத்தில் பழமைதன்னை!

சேர்திருக்கம் நாட்டிற்கு சிறந்ததென்பார்,
சீறிடுவார் மறைவாக சொல்லில் கண்டால்!
தீண்டாமை மிகத் தீது உறவதென்பார்,
திகைத்திடுவர் தீண்டாதார் அருகில் வந்தால்!

நன்மூடப் பழக்கங்கள் மண்மூடிடுக,
'காலைக ள கட்டிடுக' கங்கணமென்பார்;
களிப்புடனே காளைகளும் பாய்ந்து வந்தால்,
காய்ந்திடுவார்! கைதுடிப்பார்! காலியென்பார்!

கனமான பதவிகளைச் சுவைப்போரெல்லாம்
கைக் கொள்ளும் வாய்ச் சரக்கு இவைகளெல்லாம்;
அன்னாரே இந்நாட்டின் நல்லவர்கள்!
இடர்பட்டு செயற்படும் மற்றோரெல்லாம்

காலிகளாம்! கயவர்களாம்! நாஸ்திகராம்!
நலலவர்கள் கூறுகின்றார்! நன்று, நன்று.
நாளொன்று கட்டாயம் வந்து தீரும்;
நல்லவர்கள் யாரென்று கண்டு கூறும்.

உணவு உற்பத்தியைப் பெருக்க அரசியலார் முயற்சி

சென்னை, மதுரை, விஜயவாடாவில் மாநாடுகள் நடத்துவர்

சென்னை, ஏப்ரல். 1 —

சென்னை ராஜாங்கத்தின் உணவு நிலைமையை பரிசிலனை செய்வதற்கும், உணவு [illegible]

[illegible] உணவு மாநாட்டை இம்மாதமே கூட்ட சென்னை ராஜாங்க உணவு கமிஷனர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

இதன்படி ஏப்ரல் 6-ந் தேதி விஜயவாடாவில் ஒரு மாநாடு நடைபெற இருக்கிறது. இதில் கிருஷ்ணா, குண்டூர், கிழக் கோதாவரி, மேற்கு கோதாவரி முதலிய ஜில்லாக்களின் கலெக்டர்களும், ஜில்லா விவசாய அதிகாரிகளும் விவசாய என்ஜினீயர்களும் கலந்துகொள்வர்.

சென்னையில் மாநாடு ஏப்ரல் 11-ந் தேதி நடைபெற இருக்கிறது. இதில் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்லூர், சேலம், சித்தூர், விசாகபட்டணம் ஆகிய ஜில்லாக்களின் கலெக்டர்கள், ஜில்லா விவசாய அதிகாரிகள், விவசாய என்ஜினியர்கள் கலந்துகொள்வார்கள்.

மதுரையில் நடைபெறும் மாநாடு இம்மாதம் 14-ந் தேதி நடைபெற இருக்கிறது. அதில் திருச்சி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லா கலெக்டர்கள், ஜில்லா விவசாய அதிகாரிகள், விவசாய என்ஜினீயர்கள் கலந்துகொள்வார்கள்.

ஈராக்கிற்கு புது துறைமுகம்

பாக்தாத், ஏப்ரல். 1—

பஸ்ராவிற்கு அருகில் புது எண்ணெய் வயல்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதனால் பாவோ என்கின்ற இடத்தில், ஒரு புதுத் துறைமுகம் ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

மலேயா நிலைமையில் மாறுதல் இல்லை

[illegible]

"மலேயாவில் நடக்கும் கொரில்லா கம்யூனிஸ்டு போராட்டம், அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்கொண்டும் அடக்கப்படவில்லை" என்று மலேயா போலீஸ் கமிஷனர் தோழர் கிரே இன்று அறிவித்தார். அரசாங்க தீவிர முயற்சிகள் எடுத்துக்கொண்ட காரணத்தால் பயங்கரவாதிகள்: அழிவிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தீவிர போராட்டம் ஆரம்பித்து விட்டார்களென்று அவர் கூறினார்.

பயங்கரவாதிகளை அழிக்க ஒழிக்க மலேயா அரசாங்கத்துக்கு வரம்பற்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன வென்று போலீஸ் அதிகாரி அறிவித்தார்.

மார்ச்சு மாதத்தில் மட்டும் 38 கொரில்லாக்கள் கொல்லப்பட்டு 15 பேர் கைது செய்யப்பட்டனரென்று அவர் கூறினார். மேலும் சந்தேகத்தின் மேல் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனரென்று அவர் கூறினார்.

ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் 300 000 இந்திய ரப்பர் தொழிலாளர்களுக்கு 12 சதவிகிதம் கூலி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது.

கீழ் வங்காள கவர்னர்

தோழர் பெரோஜ்கான் நியமனம்

தோழர் பெரோஜ்கான் நூன் கீழ் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளாரென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

அவர் ஏப்ரல் 5-ந் தேதி பதவி ஏற்றுக்கொள்கிறார்.

பிரிவினை செய்யப்படாத இந்திய வைஸ்ராய் நிர்வாக சபையின் அங்கத்தினராக இவர் பதவி வகித்திருக்கிறார்.

சென்னை சேரிவாழ்வோர் மாநாடு

வேண்டுகோள்

சென்னை நகரில் மொத்தம் 231 சேரிகள் உள்ளன. அவற்றில் 42 கார்ப்பரேஷனுக்கும், 35 சர்க்காருக்கும், 154 தனிப்பட்டவர்களுக்கும் சொந்தமாகும். இவற்றில் பலவற்றிற்குச் சரியான ரோடுகளோ, விளக்குகளோ, தண்ணீர்க் குழாய்களோ, கக்கூஸ்களோ இல்லை. நாகரிகமாக வாழ்வதற்கான மிகக் குறைந்தபட்ச தேவைகள்—தண்ணீர், சுகாதாரம், விளக்குகள் இவைகூட இல்லாமல் அவைகளை வைத்திருப்பது கார்ப்பரேஷனின் மன்னிக்கமுடியாத, கொடிய செய்கையாகும்.

1946-ல் அரசாங்கம், ஒரு புதுப்பித்தல் வீடு கட்டும் திட்டத்தைத் தயாரிக்க கமிட்டி ஒன்றை அமைத்தது. நகரத்திலுள்ள 12 லட்சம் மக்களில் 9 லட்சம் பேர் மாதம் ரூ 50க்கும் குறைவாகச் சம்பாதிப்பதாயும், ஆனால் 10 ரூபாயும் அதற்குக் குறைந்த வாடகையுள்ள வீடுகள் 19 253-ம் 24,000 மனிதர் வாழத் தகுதியற்றக் குடிசைகளும் இருப்பதாகக் கமிட்டியினர் ஆராய்ந்தனர். ஆகவே ஒரு வீடு அல்லது குடிசையில் சராசரி 20 பேர் அடைப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. சென்னை மாநகரத்திலுள்ள ஏழைகளுக்கும், மத்திய தர வர்க்கத்தாருக்கும் போதுமான வீடுகள் கட்டித்தரவேண்டுமாயின் பல நூறு கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படவேண்டுமே எனக் கமிட்டி குறித்தது. இந்த ரிப்போர்ட்டை அரசாங்கம் பத்திரமாகப் பூட்டி வைத்து பூஜைபோட்டு வருவதாகச் செய்தி!

1946-ல் சேரி [illegible]

[illegible] ரூபாய் ஒதுக்க வேண்டுமென அக்கமிட்டி சிபாரிசு செய்தது. ஆனால் பட்ஜெட்டில் அதுதான் காணோம். அரசாங்க மாவது குறைந்தபக்ஷம் தனக்குச் சொந்தமான சேரிகளிலேனும் ஹரிஜன அபிவிருத்தி நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் செலவு செய்து சில வசதிகளைச் செய்திருக்கலாம்; அதுவுமில்லை.

அரசாங்க உதவி இல்லாமல், நகரசபை மட்டும், சேரிகளை அகற்ற முடியாது. அல்லது அங்கேவாழும் மக்களுக்கு நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்கமுடியாது. உண்மையே யானாலும், இந்த மக்களை இன்னும் எத்தனை காலத்திற்கு நரக வாழ்க்கை வாழ அனுமதிப்பது. சேரிவாழ்வோரின் குறைந்த பக்ஷத் தேவைகளான போதிய தண்ணீர் சுகாதார வசதி, விளக்குகள் முதலியவைகளையாவது அளிப்பது நகரசபையின் தவிர்க்கமுடியாத கடமையாகும். இவ்வருட பட்ஜெட் மட்டும் என்ன? எப்போதும்போலவே சேரிகள் விஷயம் சற்றும் கவனிக்கப்படவில்லை. குழாய்களுக்காக 10,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்படி எல்லாக் குழாய்களும் போடப்பட்டால்கூட ஒரு வருடத்தில் மொத்தம் 70 குழாய்கள்தான். இந்த வேகத்தில் காரியம் நடந்தால், நகரத்திலுள்ள சேரிகளுக்குப் போதுமான அளவு குழாய்கள் கிடைக்க இன்னும் எத்தனையோ வருடங்களாகும்.

அரசாங்கத்தினிடம் பண உதவிக்காக தொடர்ந்து வற்புறுத்த வேண்டுவது அவசியம்; ஆனால் அதே நேரத்தில், அரசாங்கம் 'செவிடன் காதில் சங்கு ஊதியது போல' இருப்பினும், நகரசபை உறுப்பினர் பட்ஜெட்டைத் தயாரிக்கும்போது, முதன்மையாகக் கவனிக்கவேண்டிய வைகளையும், மிக அவசியமான விஷயங்களையும் அதாவது போதுமான தண்ணீர், சுகாதாரம் இவற்றை மக்களுக்களிக்கும்முறையில் திட்டமிட வேண்டும். புத்தகாலத்தில் பட்ஜட் தயாரிப்பதுபோல திட்டவட்டமான தீர்மானமான முயற்சி செய்யப்பட்டால், அசாவது கட்டலாம். ரோடுகளுக்கு உயர்தர தளம்போடுவது போன்றவற்றை அடியோடு குறைத்து, அதன்மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அடுத்த சில வருடங்களிலாவது சேரியிலிருப்போரில் 25-பேருக்கு ஒரு குழாய், கக்கூஸ் ஒரு அம்பு, 100 அடிக்கு ஒரு தெரு விளக்கு இவற்றையாவது போட்டுத் தரமுடியும். நகரசபை, ஒரு திட்டவட்டமான அடிப்படையில் காரியங்கள் செய்யாவிட்டால் சேரிகள் பிரச்னை வரவர மோசமாகிக்கொண்டேதான் போகும். சேரி வாழ்வோர்கள், தாங்களே சேர்ந்து எழுச்சியொழிய வழமைகளோடு போக்கு, அலட்சியம் இவைகளை நகரசபை நிர்வாகத்தில் காணமுடியும். இதைச் சேரி வாழ்வோர் நன்கு உணர வேண்டும். அடுத்த 3 அல்லது 4 வருடங்களிலாவது மேற்குறிப்பிட்ட சாதாரணக் குறைந்தபக்ஷத் தேவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டுமெனில் ஒவ்வொரு ஆண்டும் 15 முதல் 30 லட்சம் ரூபாய்களைச் சேரி அபிவிருத்திக்காக ஒதுக்கப்படவேண்டுமென அந்தந்த டிவிஷன் கவுன்ஸிலர்களை அணுகி, அங்கங்கே உள்ள சேரிவாழ் மக்கள் வற்புறுத்த வேண்டும்.

வீறுகொண்ட வாலிபர்கள் யாவரும் இந்த சமூகத்தொண்டை தமது கடமையாகக் கருதி, மக்களை எல்லாம் ஒன்றுதிரட்டி சேரிகள் தோறும் கூட்டங்கள் போட்டு 2-4-50-ல் கூடப்போகும் சேரிவாழ் மக்கள் மாபெரும் மாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

நகராண்மைக் கழகம்
கவுன்சிலர்கள்

கழக நடவடிக்கைகள்

சென்னை, மார்ச். 28—

1—3—50 புதன் இரவு ஒன்பதுமணிக்குக் கழகக் கட்டிடத்தில் செயற்குழுக் கூட்டம் கூடி, கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

ஈரோடு வைத்திய வள்ளல் அவர்கள் இயற்கை யெய்தியதை குறித்து இக்கழகத்தார் வருத்தமுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் இக்கழகம் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

சேலம் சிறையில் அரசியல் கைதிகளை அநியாயமாகச் சுட்டுக்கொன்றதை இக்கழகம் வன்மையாகக் கண்டிப்பதுடன், சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் ரகசிய விசாரணையை ரத்து செய்து பகிரங்க விசாரணைக்குக் கொண்டுவரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறது.

(இதன் நகல் ஒன்று அரசியலாருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.) மேற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, செயலாளர் நன்றிகூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

• • •

தளவாய்புரம்:—இவ்வூர் தி. மு. க. சார்பில் கழகக் கட்டிடம் முன்பாக 23-3 50 இரவு 7 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் எம். என். ராமசாமி அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர் செல்லச்சாமி இன்னிசை அமுது அளித்தனர். நிலக்கோட்டை தோழர் து. ராஜாராம் அவர்கள் 'திராவிடநாடு என் பிறப்புரிமை' [illegible] யும் தொகுத்தும் [illegible] நல்ல முறையில் [illegible] எடுத்துரைத்தனர்கள். [illegible] நன்றிகூறுதலுக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

அரசம்சேரி:—18 3 50 அன்று இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழு கூடியது. தோழர் சிப்பாய் முனுசாமி அவர்கள் தலைமைவகித்தார். தலைவர், பண்டைய தமிழர் நாகரிகம் என்பதைப்பற்றி விரிவாக சொற்பொழிவு ஆற்றியபின், கழகத்தின் நிர்வாக கமிட்டி ஒன்று தேர்வு அடியிற்கண்ட தோழர்களால் அளிக்கப்பட்ட நன்கொடையை ஏற்று கொள்ளப்பட்டது.

தோழர்கள் சிப்பாய் முனுசாமி, வி. எம். ராமசாமி, எம். குப்புசாமி, ஏ. பெருமாள், ஆர். பப்பாரு, டி. கணேபதி. டி. இராசமாணிக்கம், வி. கே. கோபால், வி. அண்ணாசாமி, பி. கோவிந்தசாமி, பி. இராமஜெயம், க. கோவலு, டி. ஆர். சின்னசாமி, பி. என். நாராயணசாமி. ஒவ்வொருவரும். ரூபாய் 1-8-0 கொடுக்கப்பட்டது. தோழர் என். பாலகிருட்டிணன் கொடுத்த நன்கொடை 0—12—0. ஆக வசூல் நன்கொடை 21-12-0 இந்த ரூபாயையும் சந்தாவில் வசூல் ஆன ரூபாய் 3—10—0 இதையும் சேர்த்து ஆக ரூபாய் 25—6—0 யும் பொருளாளர் தோழர் எம். குப்புசாமி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் கழகத்திற்கு நன்கொடையாகவோ சந்தாவாகவோ பணம் திரட்ட சிப்பாய் முனுசாமி, பி. என். நாராயசாமி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடத்த நமது கழகச் சொற்பொழிவாளரைக் கொண்டுவரவும் அதற்கு ஆவனசெய்ய தோழர்கள் டி. ஆர். சின்னசாமி, ஏ. பெருமாள், ஆர். பப்பாரு, வி.என்.கோபால், பி.ராமஜெயம், முருகன், ஜி நாராயணசாமி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின் கூட்டம் முடிவுற்றது.

• • •

சென்னை - 26—3—50 15-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில் தோழர் சி. வி.ராசன் அவர்கள் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. ஆரம்பம் தோழர் சி. வி. ராசன் அவர்கள் சொந்த அலுவல்களை முன்னிட்டு ஒப்பின்மை பாலும் கழகச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக்கொண்டு இளைஞர்களுக்கு ஒருவாய்ப்பையும் அளித்துவிட்டு தோழர்களின் விருப்பத்திற்கிணங்க கழக ஆலோசகராக இருக்க ஒப்புக்கொண்டார். அவருடைய கடந்த கால சேவையை இக்கூட்டம் பாராட்டுகிறது. பிறகு கீழ்காணும் செயற்குழு ஏகமனதாக தெரிந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-இ. வடிவேலன் துணைச் செயலாளர்-வெ. பெருமாள். பொருளாளர்-எம். சாமி, விளம்பர உறுப்பினர்—இ. என். பாண்டியன், ஏனைய செயற்குழுவினர்: சி. வி. ராசன், வி. கே. தியாகராசன், மா.தாசன், ராதாகிருஷ்டினன், எ. கே. கோவிந்தசாமி. பி. சோமசுந்தரம், எ. பி. பரிபூரான், ஆரோக்கியசாமி, கதிர்வேலன். எம். டி. கோவிந்தராசன், புனிதவேல், வெங்கடசுப்ரமணி, நாராயணசாமி, திருநாவுக்கரசு, டி. டி. எஸ். மணி, ராமநாதன், எஸ் இரா. வேலாயுதம். மற்றும் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிர்வாகக்குழு உறுப்பினர்களிடமிருந்து மாதசந்தா அணா 8 வீதம் வசூலித்து கழக வேலைகளை கவனிப்பது.

நிர்வாகக் குழுக் கூட்டம் மாதா மாதம் நடத்துவது.

தளபதி அழகிரிசாமி அவர்களின் நினைவு நாளை ஞாயமூட்டும் முகத்தான் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இ. வடிவேலன் நன்றிகூற கூட்டம் முடிந்தது.

இனி நடப்பவை

வாலாஜாபாத்:—இவ்வூர் தி.மு.க. சபையில், 8—4—50 அன்று ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன் ஜி. நாராயணசாமி, ஏ. பி. தர்மலிங்கம் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

செயங்கொண்டம்:—இவ்வூர் அண்ணா மன்றத்தின் சார்பில் 5-4-50 அன்று தமிழ்ப் பேச்சுப் போட்டியும், இசைப் போட்டியும் நடைபெறும். போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர்கள் 4-4-50-க்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். போட்டி நடைபெறும் இடம், மாலை 3 மணிக்கு சேவாசதனம், கழக ஆண்டு விழா, 5—4—50 அன்று மாலை 5 மணிக்கு தோழர் சே. என். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஆ. இராமசாமி, க. நாகராசன், இரா. கதிர்வேல், வை. இராசகோபால் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசும், மதிப்பிதழ்களும் அளிக்கப்படும்.

* * *

சென்னை, வள்ளுவர்நகர்

சேரி வாழ்வோர் மாநாடு

சென்னை, மார்ச். 31—

2—4—50 மாலை 4 மணிக்கு சென்னை பீப்பிள்ஸ்பார்க்கில் மிருகக் காட்சிசாலைக் கருகிலுள்ள மைதானத்தில் சென்னை சேரி வாழ்வோர் மாநாடு நடைபெறும். தோழர் எஸ். கி. அந்தோனிப் பிள்ளை மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார்,

மேயர் டாக்டர் பி. வி. செரியன், ஜே. சிவசண்முகம் பிள்ளை, என். ஜீவரத்தினம், சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், என். எஸ். தங்கரு பன், வி. வி. முருகேச முதலியார், கே. ஜி. சிவசாமி ஆகியோர் பேசுவர்.

வேட்டை:—இவ்வூர் வள்ளுவர் இளைஞர் மன்றத்தின் சார்பாக நகராண்மைக் கழக தென்பட்ட சாலையில் டி. மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 2-4-50 அன்று காலை 9-மணிக்கு நடைபெறும்.

காந்தியார் நினைவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யால், அவர்கள் ஏராளமாகச் கொடுக்கத் தாமே முன் வருவார்கள். அதை வாங்கலாமா, வாங்கி நினைவுச் சின்னத்துக்குப் பயன்படுத்தலாமா என்று சிந்திக்கத் தூண்டுகிறோம்.

கறைபட்ட பணம், காந்தியாரின் நினைவையும் கறைபடுத்திவிடும். அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமானால், மக்களிடம் செப்புக் காசுகள் வாங்குங்கள், சிறு துளிப் பெரு வெள்ளமாகத் திரளும். அதைக் கொண்டு நாதியற்ற குழந்தைகளுக்கு விடுதி, படிக்க வசதியற்றவர்களுக்கு இலவசக் கல்வி கொடுக்க முயலுங்கள். அப்பொழுதுதான் வருகின்ற சமுதாயம் காந்தியாரையும் நினைவில் வைத்துக் கொள்ளும். நினைவுச்சின்னம் எழுப்பினவர்களையும், போற்றும் அதிகாரிகளையும், நகராண்மைக் கழகங்களைப் பயன்படுத்தப் பணம் வசூல் செய்து எழுப்பப் பட்ட நினைவுச் சின்னம், அபிரகாம் லிங்கன் சின்னம் போன்ற அர்த்தமற்ற நாசகச் செய்ய முயலுவது எவ்வளவு தவறானதென்பதை இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள குழுவினர் சிந்திக்க வேண்டும். முக்கியமாக நகர பிரமுகர்களும், பத்திரிகை பலம் படைத்த தோழர்களும் சிந்தனையைக் கிளற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

நகராண்மைக் கழகத்தினருக்கு ஒன்று கூறுகிறோம். மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு, வீண்வேலைகளில் ஈடுபட்டு நகராண்மைக் கழகத்துக்கு இழுக்குத் தேடித் தருவதைவிட, நகராண்மைக் கழக நிதி நிலைமைக்குப் பாடுபட வேண்டியது மிகவும் முக்கியமாகும். நகரை வனப்புள்ளதாக்குவதைவிட, வாழ ஏற்றதாகச் செய்யுங்கள்' என்று நாம் நகராண்மைக் கழக அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னையிலிருந்து டில்லிக்குத் தமிழில் தந்திகள் அனுப்பலாம்

1950 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சென்னைக்கும் புதுடில்லி கிலிடையே போனோகிராம் முறையில் தமிழில் தந்திகள் அனுப்பலாம். தமிழில் எழுதப்பட்ட தந்திகள் தற்போதைக்கு சென்னை மத்திய தந்தி ஆபீஸில் மாத்திரமே காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்தத் தந்திகளுக்கு எக்ஸ்பிரஸ் தந்திகளுக்கு வசூலிக்கப்படும் விகிதத்தில்—அதாவது முதல் எட்டு வார்த்தைகளுக்கு ஒன்றரை ரூபாயும் அதிகப்படி ஒவ்வொரு வார்த்தைக்கும் இரண்டணாவும் விகிதம்—கட்டணம் வசூலிக்கப்படும்.

இந்தத் தந்திகள், பேய்ச் சேர வேண்டிய இடத்துக்கு டெலிபோன் மூலம் அனுப்பப்பட்டு, தமிழ் எழுதப்பட்டு விலாசதாரருக்கு பட்டுவாடா செய்யப்படும்.

14—4—50 முதல்

சென்னை, பெங்களூர், மைசூர், சேலம், நெல்லூர் மற்றும் 15 முக்கிய நகரங்களில் வெளிவருகிறது

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St., Mannady, Madras-1